**ம.சா.2– சமுத்திரம்** **Probate.O.P.No. 151/2024** 31.07.2026.

**2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். நான் 2023 ம் வருடம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து, ஓய்வுபெற்று வீட்டில்தான் இருந்தேன். இவ்வழக்கின் மனுதாரரான வைரமுத்துவை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவரது அப்பா ஜெயராமன் என்பவர் மூலம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் சாட்சி சொல்லுவதற்கு எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல என்னை யார் அழைத்தார்கள் என்றால் வைரமுத்து அழைத்தார். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் என்ன விசயம் இருந்தது என்று எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் மனுதாரரின் தாயார் தனலட்சுமி என்பவர் கடந்த 03.10.2023 அன்று பதிவு செய்யப்படாத மனுதாரருக்கு உயில் எழுதி வைத்ததாக கூறியுள்ளேன். அந்த உயில் யார் எழுதியது, எங்கு வைத்து எழுதப்பட்டது என்று சொன்னால் அவரது வீட்டில் ஏற்கனவே எழுதி வைத்திருந்தரர்கள். அதை  படித்து பார்த்து கையெழுத்து போடச்சொன்னார்கள். நான் இரண்டாவதாக கையெழுத்து செய்துள்ளேன். நான் கையெழுத்து போட்ட உயிலை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் அந்த உயிலில் கையெழுத்து போடும்போது யார் யார் வீட்டில் இருந்தார்கள் என்றால் தனலட்சுமி மற்றும வைரமுத்துவின் அப்பா இருந்தார்கள். வைரமுத்து திருச்சியில் குடியிருந்து வரும் விபரம் எனக்கு தெரியும். வைரமுத்துவின் அப்பா ஜெயராமனை எனக்கு நீண்ட காலமாக தெரியும். வைரமுத்துவிற்கு மொத்தம் எத்தனை குழந்தைகள் என்பது எனக்கு தெரியாது. ஜெயராமன் என்பவருக்கு 4 குழந்தைகள் உள்ளனர். அவர்களில் ஒரு நபர் வைரமுத்து, மற்ற மூன்று நபர்கள் எங்கு குடியிருந்தார்கள் என்றால் முதலில் ராஜபாளையத்தில் இருந்தார்கள், தற்போது எங்கு குடியிருந்து வருகிறார்கள் என்பது எனக்கு தெரியாது. தனலட்சுமி என்பவர் உடல்நிலை சரியில்லாமல் ராஜபாளையம் ராம்கோ

மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துவந்த விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியது. நான் வீட்டிற்கு செல்வதற்கு முன் உயிலில் யார் யார் கையெழுத்து போட்டிருந்தார்கள் தனலட்சுமி என்பவர் கையெழுத்து செய்திருந்தார். நான் போகும்போது ஏற்கனவே தனலட்சுமி அம்மா கையெழுத்து செய்துள்ள உயிலில் தான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் வீட்டில் இருக்கும்போது தனலட்சுமி அம்மா கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தை நான் படித்து பார்த்தேன். மேற்படி உயிலில் 08.02.2012 ம் ஆண்டு எழுதிக்கொடுக்கப்பட்ட ஒரு தானசெட்டில்மெண்ட் ஆவணம் குறிப்பிடப்பட்டிருந்தது அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்து விபரமும், உயிலில் உள்ள சொத்துவிபரமும் ஒன்றா என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் அந்த உயிலில் கையெழுத்துபோட்டுவிட்டு ஒரு 10 நிமிடம் அங்கிருந்தேன். தனலட்சுமி அம்மா எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியும். அவரது இறப்பு இறுதி சடங்கிற்கு சென்றேனா என்றால் அவர் திருச்சியில் இருந்தார். தனலட்சுமி அவர்களை அவரது மகள் நிர்மலா அவர்கள் கவனித்துவந்த விபரம் எனக்கு தெரியாது. நான் சாட்சி சொல்ல வந்த வழக்கு என்ன வழக்கு என்பது எனக்கு தெரியும். இந்த வழக்கில் ஜெயராமன் என்பவர் ஒரு தரப்பினர் என்பது எனக்கு தெரியும். ஜெயராமன் எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் அனைத்தும் பொய் என்றும், அதுபோல் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.